**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 351/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | திரு. ஈவாமுதன் |
| Father's Name/Husband Name: | திரு. பொன்னுசாமி |
| Village : | நத்தக்காடு |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது நத்தக்காடு கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சாந்தி எனது சகோதரி ஆவார். எதிரிகளை தெரியும். எனது உறவினர்கள் ஆவார்கள். மாதம், தேதி எனக்கு ஞாபகமில்லை. மாவிலங்கை செல்லும் சாலை அருகே அ.சா.1ன் தந்தைக்கு சொந்தமான காடு உள்ளது. அதில் பருத்தி பயிரிட்டு வைத்திருந்தார்கள். 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலை நேரத்தில் என்னுடைய வயலிலிருந்து எள் அறுத்து அதனை அங்கு மூடி வைத்திருந்தேன். அப்போது சாந்தி வயல் அருகே இருந்து பெண் சத்தம் கேட்டது. நான் எப்போதும் கேட்கும் சத்தம் என்று நினைத்து என்னுடைய இரு சக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டேன். பின்னர் அ.சா.1க்கு அடிப்பட்டுவிட்டதாக தகவல் கேள்விப்பட்டேன். அந்த சமயத்தை அ.சா.1 காட்டிற்கு அருகே இருந்த நபர்களான எதிரிகள் அ.சா.1யை அடித்துவிட்டதாக ஊரில்

சொன்னார்கள். நேரில் இச்சம்பவத்தை நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை இதுவரையும் விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 23.03.2023ம் தேதி என்னை போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் அன்று என்னை விசாரணை செய்யவில்லை. கடந்த 20.03.2023ம் தேதியன்று மாலை 5 மணியளவில் சாந்தி தனது பருத்திக் காட்டில் எதிரிகள் ஆட்டை மேய்த்ததால் அது சம்மந்தமாக எதிரிகளிடம் கேட்டதாகவும் அப்போது எதிரிகள் இருவரும் இது உன் வயலா என்று கூறி நீ என்ன கேட்குற என்று சொல்லி கீழே கிடந்த மூங்கில் கழியை எடுத்து 1ம் எதிரி சாந்தியை மாறி மாறி அடித்தார்கள் என்றும் அப்போது அ.சா.1 வலி தாங்காமல் கத்தினார் என்றும் அந்த சமயத்தை நான் நேரில் பார்த்து தடுத்ததாக வாக்குமூலம் போலிசாரிடம் கொடுத்துள்ளேன் என்றால் நான் அவ்வாறு எந்த சம்பவத்தையும் தடுக்கவில்லை. போலிசாரிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை. எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.